## வணக்கம்!

### கல்வி, சனிக்கிழமை கற்பித்தல் நேரம் 09.30-12.30 வரையும்

14.09.2024 சனிக்கிழமையில் இருந்து நவராத்திரி விழா நிகழ்வு நோக்கிய கலை (valfag) நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது.

5 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களில் விரும்பமுடையவர்கள் தேர்வுசெய்யும் கலைகளும் அதற்கான பயிற்சிகளும் 13.15 மணிவரை நடைபெறும்.

வழமைபோல தொடக்கநிலை, மழலையர், சிறுவர் நிலை வகுப்புகள் 12.00 மணி வரையும்.
21.09.2024 சனிக்கிழமை 09.45-10.45 வரை தொடக்க நிலை, மழழையர், சிறுவர் நிலை ஆகிய மாணவர்களின் பெற்றோர்களுக்கு அந்த வகுப்பு ஆசிரியர்களின் கல்வி சம்பந்தமான பட்டறை நடைபெறும். சம்பந்தப்பட்ட பெற்றோர்கள் தவறாது கலந்து கொள்ளவும்.

1வகுப்பு தொடக்கம் 4 வகுப்பு வரை 12.30 மணி வரையும் இவ்வகுப்புகளின் கலை நிகழ்வு நோக்கிய கலைப் பயிற்சிகள் நடைபெறும் வேளையில் பாடசாலை நிறைவடையும் நேரத்தில் மாற்றங்கள் இருப்பின் அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**அறிவாடல் போட்டிக்கான பயிற்சிகள் மற்றும் தெரிவுகள்.**
அறிவாடல் போட்டியில் பங்கு கொள்ள விருப்பம் தெரிவித்தவர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் 13.09.2024 ம் 20.09.2024 ம் 18.00 - 19.00 மணிக்கு ஓசன் (தமிழ்) பாடசாலையில் பயிற்சி கொடுக்க உள்ளோம். எல்லோரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு: ஒரு வளாகத்தில் ஒரு வகுப்பில் இருந்து முதல் மூன்று மாணவர்களே தேசிய மட்ட தெரிவுப் போட்டிக்குச் செல்வார்கள். எமது வளாகத்தில் தற்பொழுது 6ம் வகுப்பிலும் 9ம் வகுப்பிலும் 3க்கு மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்து இருப்பதால் அவர்களுக்கு எமது வளாகத்தில் தெரிவுப் போட்டி வைத்து முதல் மூன்று இடங்களில் வரும் மாணவர்களே தேசிய மட்ட தெரிவுப் போட்டிக்குச் செல்வார்கள்.

எமது வளாகத்தில் தெரிவுப் போட்டி 20.09.2024 வெள்ளிக்கிழமை நடைபெறும். மாற்றம் ஏற்படின் தகவல் தரப்படும்.

### வகுப்பறைச் சந்திப்புகளுக்கான நேரவிபரம்.

28.09.2024 முதல் வரை அனைத்து வகுப்புகளுக்குமான வகுப்பறை சந்திப்பு மட்டும் இடம்பெறும். அந்தந்த வகுப்புக்குரிய பெற்றோர்கள் அவசியம் வருகை தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

9ம் வகுப்பு அ&ஆ 21.09.2024 நேரம் 09:30 மணி
5ம் வகுப்பு ஆ 21.09.2024 நேரம் 09:45 மணி
3ம் வகுப்பு ஆ 21.09.2024 நேரம் 12:15 மணி
7ம் வகுப்பு 21.09.2024 நேரம் 12:30 மணி

### கலைவகுப்புகள்

வழமைபோல் நடைபெறும், மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**பெற்றோர்களுக்கான**
சிலம்பு பயிற்சி ஆண்கள் - 09:45 - 10:30, Gymsalen.
உடற்பயிற்சி பெண்கள் இசையுடன் ஆடல் - 09:45 - 10:30, Gymsalen.

## நிதி 2024

2024 ஆவணி மாதம் அன்னை தலைமை நிர்வாகத்தால் அறவிடப்பட்ட அங்கத்துவபணம் பலர் செலுத்தவில்லை என்று தகவல் கிடைத்துள்ளது, செலுத்தாதவர்கள் விரைவில் செலுத்தும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் கட்டணங்கள் செலுத்தாமல் நிலுவையில் உள்ள அங்கத்தவர்கள் கவனத்திற்கு! விரைவாக அக்கட்டணங்களை செலுத்தும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். கட்டணம் தொடர்பாக உங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருந்தால் கணக்காளரிடம் அல்லது பொறுப்பாளரிடம் 21.09.2024 சனிக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

அப்படி தொடர்பு கொள்ளத்தவறின் நாங்கள் நேரடியாக தொடர்பு கொள்ள முடிவு செய்துள்ளோம் என்பதை மனவருத்தத்துடன் அறிவிக்கின்றோம்.

## எமது வளாக இக்கல்வியாண்டில் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

**21.09.2024** தேசிய மட்டத்திலான அறிவாடல் தெரிவுப் போட்டி
**19.10.2024** நவராத்திரி விழா
**20.10.2024** அனைத்துலக மட்டத்திலான அறிவாடல் இறுதி போட்டி

குறிப்பு: சூழ்நிலைக்கேற்ப வரும் மாற்றங்களுக்கு எம்மை புரிந்துணர் வோடு தயார்நிலைப்படுத்துவோம்.

## தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

நன்றி.

இவ்வண்ணம்
நிர்வாகம்
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக்**